Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT III, TIRUPATTUR

**No C.C.44/2018**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW4 Page.No. /2021

| | | | |
|---|---|---|---|
| Name : | சிதம்பரம் | Caste : | |
| father's Name: | பெருமாள் | Calling: | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated :16.09.2021.

முதல் விசாரணை=

நான் தற்போது ஓசூர் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகபணிபுரிந்து வருகிறேன. கடந்த 1.11.2017ந்தேதி ஈரோடு இருப்பு பாதைகாவல் நிலையத்தில் தலைமைக் காவலராகபணியிலிருந்தபோது நான் நிலைய பொறுப்பு அதிகாரியாகநியமிக்கப்பட்டிருந்தேன். என்னுடைய பணி நேரம் இரவு 8.45 மணி முதல் அடுத்த நாள் காலை 6,45 மணிவரையாகும். 2.11.2017ந்தேதி காலை 6 மணிக்கு செந்தில் முருகேஷ் புகார்தாரர் என்பவர் அவரது சேரன் எக்ஸ்பிரஸ்ல் எஸ்.9கோச்சில் சென்னை முதல்ட திருப்பூர் வரைபயணம் செய்ததாகவும், பயணத்தின்போது தான் ஏறியவுடன் தன் அருகில் மடி கணிணியை வைத்துக் கொண்டு துர்ங்கியதாகவும் அதிகாலலை 2 மணிக்கு விழித்துபார்ர்த்தபோது அவரது மடிக் கணிணி இருந்த பையை காணவில்லை என்றும் அதில் ஏஇசட் லேப்டாப் மற்றும் சார்ஜ்ஜர், எல்இடி லைட்டு ஆகியவை வைத்திருந்நததாகவும், அவை திருடுபோயிருந்ததாகவம் அவற்றின் மதிப்பு ரூ.32000 எனவும் தான் ஜோலார்பேட்டை இரயில் நிலையத்தில் விழித்து பார்த்தபோது இவை அனைத்தும் திருடுபோனதாக கூறி எழுத்து மூலமாக புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் புகார்தான் அ.சா.ஆ.1 என்னிடம் அளித்த புகார் ஆகும். அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட புகாரினைப் பெற்று ஈரோடு இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண்.246/2017 பிரிவுகள் 379 இதச படி பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அிறக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். பின்னர் உதவி ஆய்வாளர் சந்தானம் அவர்களின் மேல்பார்வைக்கு சம்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கில் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி.= கடந்த 2.11.2017 அன்று அதிகாலை 2 மணிக்கு திருடுபோனதாக

புகார் அளித்தார். சேலம் இருப்பு பாதை காவல் நிலையத்தினை தாண்டிதான் ஈரோடு செல்லவேண்டுமென்றால் சரிதான். சேலம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லையென்றால் சரிதான். புகார்தாரரை நான் விசாரிக்கவில்லையென்றால் சரிதான். புகாரினை நான் பெற்றுமட்டும் கொண்டேன். புகாரினை அன்றே 2.11.2017 அன்றே மேல் நடவடிக்கைக்கு சம்ர்ப்பித்தேன். திருடுபோனது சேலம் இருப்பு பாதை காவல்நிலையத்திற்குடபட்ட ஆள்வரைக்கு பதிலாக ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை= இல்லை.